# 01 சுய விளக்கத்துடன் செயற்படுவோம்

உலகில் வாழும் தனிப்பட்ட ஒவ்வொருவரும் தமக்கென தனித்துவத்தையும் சுய அபிமானத்தையும் கொண்டுள்ளனர். அது போன்று உங்களுக்கும் தனித்துவமும் சுய அபிமானமும் உண்டு. இம் முதலாவது பாடம் எவ்வாறு நீங்கள் உங்களது தனித்துவத்தையும் சுய அபிமானத்தையும் அறிந்து அவற்றைப் பாதுகாக்க முடியும் என்பதையும், சமூகத்திலுள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்தி எவ்வாறு வாழ்க்கை இலட்சியத்தை வெற்றிகரமாக அடையலாம் என்பதைப் பற்றியும் தெளிவைப் பெற்றுத்தர முயற்சிக்கின்றது.



## 1.1 தன்னைப் பற்றிய சுய அபிமானத்தை ஏற்படுத்திக் கொள்வதன் முக்கியத்துவம்


மனித அறிவின் மிக முக்கிய தொழிற்பாடுகளுள் ஒன்றாக தன்னைப்பற்றிய தனித்துவத்தையும் சுய மதிப்பினையும் அறிந்து கொள்வது முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. தனிப்பட்டோர் ஒவ்வொருவரிடமும் அவரவருக்கு விசேடமான தனித்துவமும் சுயமதிப்பும் உள்ளது. அவற்றை அவரவர் தம்மை நோக்கிச் சிந்திப்பதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

உலகில் மனிதனுக்கு மாத்திரமே சிந்தித்து அறியும் ஆற்றல் உண்டு. வேறெந்தப் பிராணிக்கும் இத்தகைய சிந்திக்கும் அறன் கிடையாது. எனவே தனது தனித்துவத்தையும் சுயமதிப்பினையும் விளங்கி அறிகின்ற அதே நேரம்



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

ஏனையோரைப்பற்றியும் அறிந்து கொள்ளும் ஆற்றல் முக்கியத்துவமானதாகும். இப்பொழுது நீங்கள் யார்? என்பதையும் உங்களுக்குள் காணப்படும் தனித்துவப் பண்புகள் யாவை? என்பதையும், உங்களது சுயமதிப்பு எப்படிப்பட்டது? என்பதையும் நீங்கள் விளங்க அடுத்த பக்கத்திலுள்ள உருவை அவதானியுங்கள்




**நான்**

**உரு 1.1**

மேலே ஒவ்வொரு தனியாளிடமும் காணப்படும் தனித்துவமான விடயங்கள் காட்டப்பட்டுள்ளன. உங்களிடத்தில் அவ்விடயங்கள் தொடர்பில் எத்தகைய நிலை காணப்படுகிறது என்பதை சுயமாக சிந்தித்துப் பாருங்கள். அதன் மூலம் நீங்கள்:

- ஏனையோரை விட தனித்துவத்தை உடையவர்.
- உங்களுடைய தனித்துவத்தை நீங்கள் விளங்கி அறிந்து கொள்ளக் கூடியவர்.
- உங்கள் தனித்துவமான பண்புகள் உங்களிடமே இருக்கின்றன என்பதை விளங்கக் கூடியவர்.
- சுயமாகச் சிந்தித்து உங்களைப்பற்றி அறிந்து கொண்டு செயற்படக்கூடியவர்;

என்பவற்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

## எமது தனித்துவத்தை அறிந்து கொள்ளல்

நாம் தனித்துவத்தையும் சுயமதிப்பையும் கொண்டவர்களாவோம். எமது தனித்துவத்தை உறுதிப்படுத்தி சுயமதிப்பை ஏற்படுத்த வேண்டுமாயின் நாம் மூன்று விடயங்களில் கவனம் செலுத்தவேண்டும்.

- தன்னைத்தானே அறிந்து கொள்ளல்.
- தன்னைத் தானே ஒழுங்குபடுத்திக் கொள்ளல்.
- தனது அபிப்பிராயங்களைத் தானே வெளிப்படுத்துதல்.

(1) எமது தனித்துவத்தை விளங்கி சுயமதிப்பை முன்னேற்றுவதற்குரிய முதற்படி தன்னைத்தானே அறிவதாகும். நீங்கள் உங்களைப் பற்றி உங்களது மனதிற்குள் பதித்து வைத்துள்ள விடயங்களை அறிவதையே இது குறிக்கின்றது. உரு 1.1 இனை அவதானித்து அவற்றில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் மூலம் உங்களை அறியலாம்.

(2) தனித்துவத்தை உறுதி செய்து கொள்வதற்குரிய இரண்டாவது படி தன்னைத்தானே ஒழுங்குபடுத்திக் கொள்வதாகும்.இதன் போது உங்களிடம் காணப்படும் தனித்துவமான பண்புகளை விளங்கி நீங்கள் உங்களது சுயமதிப்பை முன்னேற்றி ஒழுங்குப்படுத்திக் கொள்ளலாம்.

(3) எமது தனித்துவத்தையும் சுயமதிப்பையும் விளங்குவதற்கான மூன்றாவது படி தனது அபிப்பிராயங்களைத் தானே வெளிப்படுத்தலாகும். நீங்கள் உங்களுக்குள் இருக்கும் அபிப்பிராயங்களை பெற்றோர், உறவினர், நண்பர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊடகங்கள் மூலமாக வெளிப்படுத்தலாம்.

"பிள்ளைகள் தமது வயது, அறிவு, முதிர்ச்சி
என்பவற்றுக்கேற்ப சகல விடயங்களிலும்
கருத்துக்களையும் தமது சொந்த அபிப்பிராயங்களையும்
வெளிப்படுத்தும் உரிமையுடையோர்களாவர்."

(ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் சாசனத்திலிருந்து)

## எமது தனித்துவப் பண்புகள்

ஒவ்வொருவரிடமும் தாம் கொண்டிருக்கின்ற தனித்துவம், சுயமதிப்பு தொடர்பில் பல்வேறு பண்புகள் காணப்பட முடியும். அப்பண்புகள் தமக்கு சாதகமாகவும் அல்லது பாதகமாகவும் இருக்கலாம். சிலவேளை உங்களிடம் இல்லாத சிறந்த பண்புகள் ஏனையோரிடம் காணப்படலாம்.

வாழ்க்கைத் தேர்ச்சிப் பாட ஆசிரியர் - தனித்துவம், சுயமதிப்பின் மூலம் வெளிக்காட்டப்படும் நல்ல - தீய பண்புகளை அட்டைகளில் எழுதி ஒரு பெட்டியினுள் இட்டு மாணவர்களிடம் ஒவ்வொன்றாக எடுக்கச் செய்து, அவற்றினைப் பற்றி மாணவர்களுக்கு விளக்கினார். அதன்போது மாணவர்களால் தெரிவு செய்யப்பட்ட அட்டைகளில் பின்வருமாறு பண்புகள் காணப்பட்டன.

| | | |
|---|---|---|
| நேர்மை | சுயநலம் | ஒழுக்கம் |
| பொறாமை | பயம் | கோபம் |
| தைரியம் | துணிச்சல் | நம்பிக்கை |
| | பொதுநலம் | |

மேற்படி பண்புகளை அவதானியுங்கள். அவற்றுள் எவை நல்ல தனித்துவப்பண்புகள், எவை தீய பண்புகள் என்பதை விளங்கிக் கொள்ளுங்கள்.

எல்லோரிடமும் இந்த இருவகைப் பண்புகளும் காணப்படலாம். ஆனால் அவற்றுள் மதிக்கப்படக் கூடிய பண்புகளையே நாம் வெளிப்படுத்தவும் பின்பற்றவும் வேண்டும். நற்பண்புகள் உடைய தனித்துவத்தையும், சுய மதிப்பையும் உடையோர் சமூகத்தில் மதிப்பையும் கௌரவத்தையும் பெற்றுக் கொள்வர். மாறாக தீய குணப் பண்புகளை உடையவராக இருந்தால் சமூகத்தினால் நிராகரிக்கப்படுவர்.

நீங்கள் உங்களிடம் காணப்படும் இருவகையான தனித்துவ பண்புகளையும் சுயமாக அடையாளம் காணுங்கள். ஏனையோரிடம் உள்ள பண்பு-களுடன் அவற்றை ஒப்பிட்டுப் பாருங்கள். அதன் பின்னர் உங்களுடைய தனித்துவத்தையும் சுயமதிப்பையும் வெற்றிகரமாக ஆக்குவதற்குப்

பின்வரும் தீர்மானத்திற்கு நீங்கள் வருவீர்கள்.

- ❖ உங்களிடம் காணப்படும் சிறந்த தனித்துவப் பண்புகளை அறிந்து பின்பற்றுவீர்கள்.
- ❖ உங்களிடம் காணப்படும் பொருத்தமற்ற குணப்பண்புகளை அறிந்து அவற்றை நீக்கிக்கொள்வீர்கள்.
- ❖ பிறரிடம் காணப்படும் சிறந்த பண்புகளுக்கு மதிப்பளிப்பீர்கள்.
- ❖ பிறரிடம் காணப்படும் - ஆனால் உங்களிடம் காணப்படாத சிறந்த பண்புகளை உங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்வீர்கள்.
- ❖ பிறரிடம் காணப்படும் பொருத்தமற்ற குணப்பண்புகளிலிருந்து விலகி இருப்பீர்கள்.

இவ்வாறு செயற்படும் ஒருவராக நீங்கள் இருந்தால் உங்களது தனித்துவமும் சுயமதிப்பும் சிறப்படையும்.

## தனித்துவத்தையும் சுயமதிப்பும் பாதுகாப்பது எப்படி?

நாம் தனித்துவம், சுயமதிப்பு என்பவற்றை கொண்டிருந்தால் மட்டும் போதாது அவற்றைப் பாதுகாக்கவும் வேண்டும். நாளுக்கு நாள் நமது எண்ணங்களும் சூழ்நிலைகளும் மாற்றமடையும் போது எமது தனித்துவமும் சுயமதிப்பும் பாதிக்கப்படலாம். ஆயிரம் நாள் பாதுகாத்து வந்த கௌரவம் அரை நொடியில் போய்விடக் கூடாது. அது தொடர்ந்தும் பாதுகாக்கப்பட வேண்டும். தனிப்பட்டவர்களது தனித்துவம் பாதுகாக்கப்படும் போது தான் எமது சமூக அமைப்பும் பாதுகாக்கப்படும்.

அன்று ஞாயிற்றுக்கிழமை பாடசாலை ஓய்வு நாள். ஹாசிம் வீட்டிற்கு அவனது வகுப்பு நண்பர்களான கமலும் பிரகாசும் வந்திருந்தனர். ஹாசிமின் தந்தையும் வீட்டில் ஓய்வாக இருந்தார். பகலுணவுக்குப்பின் அவர்கள் உரையாடினர்.

கமல் :- அங்கிள்! நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் புத்தகம் காந்தியைப் பற்றியதா...?

தந்தை :- ஆமாம், கமல்! காந்தியின் வாழ்க்கை பற்றிக் கூறும் 'சத்திய சோதனை' என்ற புத்தகம் இது தான். அவர் நல்ல மனிதப் பண்புகள் நிறைந்தவர்.

பிரகாஷ்:- அங்கிள்! மகாத்மாகாந்தியின் தனித்துவமான பண்புகளை ஏன் எல்லோரும் மதிக்கிறார்கள்?

தந்தை :- அவர் அன்பு, கருணை, அகிம்சை, பணிவு, ஏழ்மை போன்ற பண்புகளை தனித்துவமாகக் கொண்டிருந்தார் மக்களுடன் சேர்ந்து நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுப்பட்டவரல்லவா?

கமல் :- ஏன் எல்லோரும் தனித்துவமானவர்கள் தானே! அப்படியானால் மற்றவர்களும் ஏன் காந்தியைப் போல் மதிக்கப்படுவதில்லை அங்கிள்!

தந்தை :- எல்லோரும் தனித்துவமானவர்கள் தான்! ஆனால் மதிக்கத்தக்க பண்புள்ளவர்கள் மட்டுமே கௌரவமாக மதிக்கப்படுவார்கள். தீய பண்புகளைக் கொண்டவர்கள் மதிக்கப்படுவதில்லை...

ஹாசிம் :- அப்பா! எப்படி எமது தனித்துவத்தை நாம் பாதுகாக்க முடியும்...? சொல்லுங்களேன்...

தந்தை :- தனித்துவமாக வாழும் நாம் கடமைகளைச் செய்து ஒழுக்கமாக வாழ்ந்தால்... அதைப் பாதுகாக்கலாம்...

பிரகாஷ்:- என்னென்ன கடமைகள் செய்ய வேண்டும்? அங்கிள்.

தந்தை :- நேர்மையாக வாழுதல்! உறவினர்களுடன் ஒற்றுமையாக இருத்தல்...! கற்ற நல்ல விடயங்களை வாழ்வில் பின்பற்றுதல்...! பொறுப்புக்களை சரியாக நிறைவேற்றுதல்...! நாட்டுச் சட்டங்களை மதித்தல்...! இவ்வாறு நமது கடமைகளைச் செய்யும் போது நமது தனித்துவத்தை பாது காத்துக் கொள்ளலாம்...

கமல் :- இவ்வளவு விஷயங்கள் இருக்கின்றதா அங்கிள். நீங்கள் எங்களுக்கு சொல்லித்தந்தது மகிழ்ச்சியாக உள்ளது...

கமலும்

பிரகாசும்:-நேரமாகி விட்டது- அப்ப... நாங்கள் புறப்படுகிறோம்... மிக்க நன்றி... அங்கிள்!

தந்தையும்

ஹாசிமும் :- நன்றி. நல்லது போய்வாருங்கள்!

மேற்படி உரையாடலில் இருந்து நீங்கள் என்ன விளங்கிக் கொண்டீர்கள். எமது தனித்துவத்தையும் சுயமதிப்பையும் பாதுகாப்பதற்கு சிறந்த பண்புகளை நமக்குள் ஏற்படுத்திக் கொண்டு சமூகத்தில் நாம் கடமைகளையும் செய்ய வேண்டும் என்பது உங்களுக்குப் புரிகின்றதல்லவா!.

**செயற்பாடு**

01. தனித்துவத்தையும் சுயமதிப்பையும் விளங்கிக்கொள்வதற்குரிய மூன்று படிமுறைகளையும் கூறுக.

02. உங்களிடம் காணப்படும் தனித்துவத்தை வெளிப்படுத்தக்கூடிய பண்புகளை சுயமாக அட்டவணைப்படுத்துக.

03. எமது தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய கடமைகள் குறித்து குழுவாகக் கலந்துரையாடி அட்டைகளில் எழுதி காட்சிப்படுத்துக.

## 1.2 சமூகத்திலுள்ள சாதகமான பாதகமான சக்திகளை அறிவோம்

இதுவரை உங்களது தனித்துவத்தையும் சுயமதிப்பையும் எவ்வாறு விருத்தி செய்வது என்பது பற்றிக் கற்றீர்கள். இங்கு சமூகத்திலுள்ள சாதக, பாதக சக்திகளை இனங்கண்டு எவ்வாறு வாழ்க்கையை வெற்றிகரமாக ஆக்கிக் கொள்ளலாம் என்பது பற்றி இப்போது அறியலாம்.

வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கே அனைவரும் ஆசைப்படுவார்கள். நீங்களும் அதைத்தான் விரும்புவீர்கள். அப்படியானால் சமூகத்திலுள்ள சாதகமான சக்திகளையும், பாதகமான சக்திகளையும் தெரிந்திருப்பது அவசியமாகும். அப்போதுதான் சிறந்த சக்திகளை வாழ்க்கையுடன் இணைத்துக் கொண்டு எம்மால் வாழ முடியும்.



மாணவர்கள் குழுவொன்று வாழ்வூருக்குப் பிரயாணம் ஒன்றை மேற்கொண்டது. வழியில் தங்களுக்குள் கதைத்துச் சிரித்து மகிழ்ச்சியாக சென்று கொண்டிருக்கும் போது அங்கே இரண்டு பாதைகள் காணப்பட்டன "எந்தப் பாதையில் நாங்கள் வாழ்வூருக்குப் போகலாம்...? என்று ஒருவரை ஒருவர் கேட்கலாயினர்.

மாணவர்கள் தமக்குள் பேசிக்கொண்டிருந்த அந்த நேரத்தில் அவ்வழியால் முதியவர் ஒருவர் வந்து கொண்டிருந்தார். அப்போது ஒரு மாணவன் "முதியவரிடம் நாம் பாதையைக் கேட்டுத் தெரிந்து கொள்வோம்" என்றான். 'ஆம்' என்று மாணவர்கள் முதியவரை அணுகினர்.

"ஐயா! நாங்கள் வாழ்வூருக்குப் போகிறோம். எந்தப் பாதையால் செல்ல வேண்டும்? உதவுவீர்களா?" என்று ஒருவன் கேட்டான். அதற்கு முதியவர் "தம்பிகளா! இரண்டு பாதைகளும் வாழ்வூருக்குத்தான் செல்கின்றன" என்றதும்... ஒரு மாணவன் "எவ்வளவு தூரம் போகணும் ஐயா?" என்று கேட்க, முதியவர் "அவசரப்படாதீர்கள்..! வாழ்வூருக்கு நீண்ட தூரம் நீங்கள் செல்ல வேண்டும்..! முதலாவது பாதை அமைதியானது... அதில் போனால் இடைவெளியில் நல்ல மனிதர்களை நீங்கள் காணலாம். நல்ல குடும்பங்களும் பள்ளிக் கூடங்களும் உண்டு! அதில் நீங்கள் தங்கிச்செல்லலாம். வழிபடுவதற்கு மதத்தலங்களும் உண்டு...! பாதை பசுமையாக இருக்கும்."

அப்படியானால் இரண்டாவது பாதை" என்றான் மாணவன் ஒருவன். அதற்கு முதியவர் "அது.... அபாயகரமான பாதை .... கரடு முரடானது. அதில் கொடிய மனிதர்கள் வாழ்கிறார்கள்... அவர்கள் போதைப் பொருள்களுக்கு அடிமையானவர்கள்... துஷ்ப்பிரயோகங்களில் ஈடுபடுபவர்கள்.... நல்ல குடும்பங்களோ, தங்கிச் செல்ல இடங்களோ இல்லை...அவ்வழி உங்களுக்கு ஆபத்தானது .... சரி தம்பிகளா எனக்கு நேரமாகிறது. நான் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டு வேகமாக நடந்தார் முதியவர்.

மேற்படி கதையை அவதானித்தீர்களா? அதிலிருந்து நீங்கள் பெறும் விளக்கம் என்ன? அந்தக் குழுவில் நீங்கள் இருந்தால் எந்தப்பாதையைத் தெரிவு செய்வீர்கள்? இவற்றிலிருந்து சமூகத்தில் வாழும் நாம் அங்குள்ள நல்ல- தீய சக்திகளை அறிந்து கொள்வது கட்டாயமல்லவா! கீழே கூட்டினுள் தரப்பட்டுள்ள சமூக சக்திகளை சாதகமானவை பாதகமாவை என பிரித்தறியுங்கள்.

அறிஞர்கள்

யுத்தமும் அழிவும்

மூமியங்கள்

வழிபாட்டுத் தலங்கள்

வன்செயல்கள்

பாடசாலை


குடும்பம்

வேற்றுமை

போதைப் பொருட்கள்

## தீய சக்திகளின் விளைவுகள்

நீங்கள் சமூகத்தில் பலதரப்பட்ட சக்திகளைப் பற்றி அறிந்திருப்பீர்கள். அவற்றுள் தீய சக்திகள் எமக்கு ஆபத்தானவை. அவற்றினால் எமது தனித்துவமும் சமூக அந்தஸ்தும் பாதிக்கப்படலாம்.




இவை அண்மையில் இடம் பெற்ற கண்காட்சி ஒன்றில் வைக்கப்பட்டிருந்தவையாகும். இவைகளை பார்த்த உங்களுக்கு கிடைக்கும் படிப்பினை யாது? இவை அபாயம் நிறைந்த சமூகசக்திகள் அல்லவா? இவற்றினால் தான் சமூகத்தின் அமைதி, ஒழுங்கு, மதிப்பு எல்லாமே கெட்டுப்போகிறது. எனவே இத்தகைய சக்திகளை நாம் துடைத் தெறிய வேண்டும். சமூகத்திலுள்ள தீய சக்திகளால் பின்வரும் விளைவுகள் ஏற்படுகின்றன.

- குற்றச்செயல்கள் அதிகரித்தல்.
- சமூக ஒற்றுமை சீர் குலைதல்.
- மனித உரிமைகள் மீறப்படல்.
- துஷ்பிரயோக நடவடிக்கைகள் அதிகரித்தல், மக்களின் உயிர்களும் உடமைகளும் அழிக்கப்படல்.
- மக்கள் சொந்த இடங்களில் வாழ முடியாது அகதிகளாகுதல்.
- கலாசாரமும் ஒழுக்கமும் சீர்குலைதல்.
- நாட்டின் வளங்கள் அழிந்து, பொருளாதாரம் பாதிக்கப்படல்.

இவற்றிலிருந்து பாதுகாப்பு பெற நாம் செய்ய வேண்டியது என்ன?.
இவற்றுக்கு நாம் பரிகாரம் காணவேண்டும்.நாம் ஒவ்வொருவரும் சமூகத்தின் அங்கத்தவர் என்ற வகையில் தீய சக்திகளிலிருந்து நம்மையும் பிறரையும் விலக்கி சாதகமான சமூக சக்திகளை எமது வாழ்வோடு இணைத்துக் கொண்டு செயற்படவேண்டும். அதனால் வாழ்க்கையினை வெற்றியாக்கலாம்.

***"கெட்ட நண்பனுடன் சேர்ந்திருப்பதை விட தனிமையில் இருப்பது மேலானது. தனிமையில் இருப்பதை விட நல்ல நண்பனோடு சேர்ந்திருப்பது சிறந்தது."***

**செயற்பாடு**

(01) 1. வகுப்பிலுள்ள மாணவர்களை குழுக்களாகப் பிரித்து வகைப்படுத்துக

2. ஒவ்வொரு குழுக்களுக்கும் எழுது கருவிகளை வழங்கி சமூகத்திலுள்ள சாதக பாதக சக்திகளை கலந்துரையாடல் மூலம் அறிந்து எழுதச் செய்து வகுப்பில் கலந்துரையாடுக.

(02) பாதகமான சமூக சக்திகளால் ஏற்படும் பாதிப்பினைச் சித்தரிக்கும் வகையில் குறு நாடகம் ஒன்றை தயாரித்து நடித்துக் காட்டுக.

## 1.3 வாழ்க்கை இலட்சியத்தின் முக்கியத்துவம்

இது வரை நீங்கள் எவ்வாறு வாழ்க்கையின் வெற்றிக்கு சாதகமான சமூகசக்திகளைப் பயன்படுத்துவது என்பது பற்றி அறிந்தீர்கள். இப்போது அத்தகைய வாழ்க்கைக்கு இலட்சியம் இருக்கவேண்டியதன் அவசியம் பற்றி

தெரிந்து கொள்ளுங்கள். இலட்சியம் என்பது எமது வாழ்க்கையின் உயர்ந்த குறிக்கோளாகும். நாம் எமது வாழ்வில் எதை அடைய விரும்புகிறோம் என்பதை இப்போதிலிருந்து தீர்மானித்து செயற்படுதல் என்பதே இதன் கருத்தாகும்.

அன்று புதிய வருடத்தின் முதல் பாடசாலை நாள். மாணவர்கள் குதூகலிப்புடன் தங்களது புதிய வகுப்பறைகளை ஒழுங்குபடுத்துவதில் ஈடுபட்டிருந்தனர். தரம் 7 இற்கு புதிய வகுப்பாசிரியராக நியமிக்கப்பட்டிருந்த கிருசாந்தினி ஆசிரியை வகுப்புக்கு வந்து சேர்ந்தார். தன்னை மாணவர்களுக்கு அறிமுகம் செய்த பின்னர், மாணவர்கள் பற்றியும் அவர்களது வாழ்க்கை இலட்சியங்கள் என்ன? என்பது பற்றியும் மாணவர்களுக்கு எடுத்துக் கூறினார். அதன் போது மாணவர்களுள் சிலர் தெரிவித்த கருத்துக்கள் கீழே காணப்படு கின்றன.



எனது பெயர் சாந்த ரட்ண. அப்பா அபேவிக்ரம. சொந்தமாக விவசாயம் செய்கிறார். அம்மா குசுமலதா வீட்டு பெண்ணாக இருக்கிறார். நான் ஒரு ஆசிரியராக வந்து எனது கிராமத்துக்கு சேவை செய்ய ஆசைப்படுகிறேன்.



நான் செல்வகுமார். எனது அப்பா சசிதரன். அவர் மக்கள் வங்கியில் வேலை செய்கிறார். அம்மா கவிதாஞ்சலி. ஆசிரியையாக பணியாற்றுகிறார். என்னுடைய எதிர்கால இலட்சியம் ஒரு பொறியியலாளராக வருவதாகும்.



பாத்திமா சுமையா எனது பெயர்....எனது அப்பா நஸிர். வெளிநாட்டில் தொழில் நிறுவனம் ஒன்றில் வேலை செய்கிறார்.அம்மா சஹிதா சிறுவர் பாடசாலை ஆசிரியையாக உள்ளார். எனது இலட்சியம் ஒரு மருத்துவராக வர வேண்டும் என்பதாகும்.



நான் மேரி அன்ரனிட்டா. அப்பா டேவிட், கிராம சேவகராக இருக்கிறார். அம்மா திரேஸ் தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை செய்கிறார். என்னுடைய எதிர்கால இலட்சியம் ஒரு சட்டத்தரணியாக வருவது...

மேற்படி மாணவர்களது கருத்துக்களில் இருந்து அவர்கள் ஒவ்வொரு வரும் தமக்கென்று இலட்சியங்களைக் கொண்டுள்ளார்கள் என்பது புரிகிறது அல்லவா? அவ்வறே நீங்களும் உங்களது வாழ்க்கையில் இலட்சியத்தைக் கொண்டிருத்தல் அவசியமாகும்.

## ஓர் இலட்சியமா? பல இலட்சியங்களா?

நீங்கள் யாராக இருந்தாலும் எங்கு வாழ்ந்தாலும் உங்களது வெற்றிகரமான தனித்துவத்தை நிலை நாட்டும் வாழ்விற்கு இலட்சியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

வாழ்க்கையில் நீங்கள் எதனை அடைய விரும்புகிறீர்கள்? அமைதி?... மகிழ்ச்சி?...பதவி?...புகழ்?...செல்வம்?...என எது வேண்டுமோ அவற்றில் எதை வேண்டுமானாலும் அல்லது எல்லாவற்றையும் அடையலாம். ஆனால், வாழ்விற்கு அடிப்படையான ஓர் இலட்சியம் முக்கியமானது. எனவே நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் வாழ்க்கை இலட்சியத்தை தீர்மானித்துக் கொண்டு செயற்படுங்கள். சரியான வாழ்க்கை இலட்சியத்தை நோக்கிச்சென்றால் வாழ்வில் வெற்றி காணலாம். அதே வேளை தீர்மானம் இல்லாது இருப்பது கூடாது. அவ்வாறு இருப்பது நான் எங்கு போகிறேன் என்று அறியாமல் பிரயாணம் செய்பவருக்கு ஒப்பானது.

எனவே உங்களது வாழ்க்கை தொடர்பில்

- ☞ நல்இலட்சியம் இருக்கவேண்டும் என்பதும்;
- ☞ அந்த இலட்சியம் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதும்;
- ☞ அந்த இலட்சியம் நடைமுறைச் சாத்தியமானதாக இருக்க வேண்டும் என்பதும்;
- ☞ அந்த இலட்சியம் தெளிவானதாக இருக்க வேண்டும் என்பதும் குறித்துகவனம் செலுத்துங்கள்.

## இலட்சியத்தை அடைவதற்கு மேற் கொள்ள வேண்டிய படிமுறைகள்

சமூகத்தில் எத்தனையோ முன்மாதிரி மனிதர்களது வாழ்க்கை பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர்கள் தமது வாழ்க்கை இலட்சியங்களை அடைவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றித்தெரிந்திருப்பீர்கள். அது போலவே நாமும் எமது வாழ்க்கை இலட்சியத்தை வெற்றி கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதற்குப் பின்வரும் படிமுறைச் செயற்பாடுகள் அவசியமாகும்.

**படிமுறை 1** :-**தனது இலட்சியத்தை அடையாளம் காணல்.**

தனது பல்வேறு விருப்பங்கள் ஆசைகளுக்கு மத்தியில் தனது வாழ்விற்குப் பொருந்தும் இலட்சியத்தை தெரிவு செய்வதை இது குறிக்கும்.

**படிமுறை 2** :- **இலட்சியத்தை அடைவதற்காக என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்து செய்தல்.**

என்னென்ன பணிகளும் செயற்பாடுகளும் இலட்சியத்தை அடைவதற்குத் தேவையானவை எவை? என்பதை அறிந்து செயற்படுத்துதலை இது குறிக்கும்.

**படிமுறை 3** :- **குறிக்கோள்களை உருவாக்கிக் கொண்டு செயற்படுதல்.**

தனது இலட்சியத்தை என்னென்ன வழிகளில் அடையலாம்? என்பதற்குரிய சிறிய சிறிய நோக்கங்களை ஏற்படுத்திக் கொண்டு அவற்றை அடைந்து செயற்படுவதே இதன் கருத்தாகும்.

**படிமுறை 4** :- **இலட்சியத்தை அடைவதற்காக தன்னை அர்ப்பணித்தல்**

எப்போதும் இலட்சியத்தினை அடைவதற்குரிய வேலைகளிலேயே ஈடுபட்டு விடாமுயற்சியாக இருப்பது இதன் கருத்தாகும்.

**படிமுறை 5** :- **சவால்களை எதிர் கொண்டு இலட்சியத்தை நோக்கிச் செல்லல்**

வாழ்க்கையில் வரும் சவால்களையும் தடைகளையும் சமாளித்து எடுத்த இலட்சியத்தை அடையும் வரை உறுதியாக இருப்பதாகும்.

இத்தகைய படிமுறைகளை நாம் செயற்படுத்தும் போது எமது வாழ்க்கை இலட்சியத்தை அடைவது இலகுவாக்கப்படுகிறது. இவற்றை உங்களது இலட்சியத்தை அடைவது தொடர்பிலும் பின்பற்றுகிறீர்களா? அப்படியானால் நீங்கள் அடைய விரும்பும் இலட்சியம் சிரமமின்றி சுலபமாக அமையும்.

உலகின் மிகப் பெரிய கண்டுபிடிப்பாளரான விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசன் சிறுவயதினில் ஒரு சாதாரண பத்திரிகை விற்கும் சிறுவன் ஆவான். புகைவண்டிகளில் ஏறி பத்திரிகைகளை விற்று வந்தார். ஆனால் அவருக்கு கண்டுபிடிப்பாளராக வர வேண்டுமென்ற இலட்சியம் இருந்தது. இதனால் வாழ்வில் அதிகம் சவால்களையும் தோல்விகளையும் அவர் சந்தித்த போதும் தனது கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியைக் கைவிடவில்லை. தொடர்ந்து ஆராய்ந்தார். ஒரு தடவை அவருடைய ஆராய்ச்சிக் கூடமே தீப்பிடித்து எரிந்து சாம்பலாகி விட்டிருந்தது.இருந்தாலும் அவர் முயற்சியை கைவிடவில்லை. கடைசியில் உலகில் தலைசிறந்த கண்டுபிடிப்பாளராக புகழ் பெற்று விளங்கினார். அவரது கண்டுபிடிப்பே மின்குமிழாகும்.


இத்தகைய சம்பவங்களிலிருந்து உங்களுக்குள் அனுபவங்களையும் தைரியத்தையும் வரவழைத்துக் கொள்ளுங்கள். உங்களின் வாழ்க்கை இலட்சியத்தை அடைவதற்காக!...........? இலட்சியத்தை நோக்கி செயற்படும் உங்களுக்குள் உறுதியான நம்பிக்கை, தொடர்ச்சியான செயற்பாடு, நேர்மை, பொறுமை, வீரம் முதலிய பண்புகள் காணப்பட வேண்டும். தாழ்வு மனப்பாங்கு அவசரப்படுதல், ஆராய்ந்து பார்க்காமை போன்ற குணப்பண்புகள் இருக்கக்கூடாது.

பொருத்தமான செயல்களைக் கண்டறிந்து ஈடுபடுதல் ஒவ்வொருவரிடமும் ஒன்றுக்கு மேற்பட்ட பல்வேறு ஆற்றல்களும் திறமைகளும் காணப்படலாம். அவற்றைக் கொண்டு அவர்களுக்கு பல விடயங்களை மேற்கொள்ள முடியும். ஆனால் அவ்விடயங்கள் தமது வாழ்க்கை இலட்சியத்தை நோக்கி யதாக அமைய வேண்டும். அதற்காக நாம் விரும்புகின்ற அனைத்துக் காரியங்களையும் செய்ய முடியாது. தமக்கு பொருத்தமானவற்றையே இனங்கண்டு செயற்படுத்துவது முக்கியம்.

இதைச் செய்வதா? அதைச் செய்வதா? அல்லது அனைத்தையும் செய்வதா? என்று யோசிக்காமல் எதைச்செய்ய வேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டும்.

எமக்கு விருப்பமான பல அம்சங்களில் இருந்து பொருத்தமானவற்றை இனங்கண்டு ஈடுபடுவதே புத்திசாலித்தனமாகும். நேரத்துக்கு நேரம் எம்மைக் கவரும் விடயங்கள் வேறுபடலாம். அப்போது உங்களுக்கு எது பொருத்தமானது என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும்.

## என்னைக் கவர்ந்த விடயங்கள்



- பரீட்சைக்காகப் படித்தல்.
- உறவினர்களின் வீட்டிற்குச்செல்லல்.
- ஆக்கங்களை எழுதுதல்.
- பெற்றோர்களின் வேலைகளில் உதவுதல்.
- நண்பர்களுடன் விளையாடுதல்.
- தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்தல்.
- வாசிகசாலைக்குச் சென்று நூல்களைப் படித்தல்.
- செல்லப்பிராணிகளுடன் பொழுது போக்குதல்.

மேலுள்ள உருவிலிருந்து நீங்கள் விளங்கிக் கொள்வது என்ன? ஒருவரிடம் ஒரு நேரத்தில் பல விடயங்களின் மீது ஆர்வம் இருக்கும். அவை எல்லாவற்றையும் அவரால் ஒரே நேரத்தில் செய்யமுடியாது.

அவற்றுள் தனக்குப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்து அதைச் செயற்படுத்த வேண்டும் என்ற விளக்கம் இதன் மூலம் உங்களுக்குக் கிடைத்ததா ?

**எனவே, நாம் விரும்புகின்ற விடயங்களில் பொருத்தமானதை மாத்திரம் தெரிவு செய்து ஈடுபடுவதே சரியான வாழ்க்கை இலட்சியத்தை அடைவதற்குத் துணைபுரியும்.**

### செயற்பாடு

1. வகுப்பிலுள்ள சக மாணவர்களின் வாழ்க்கை இலட்சியங்களை கேட்டறிந்து அட்டவணை ஒன்றைத் தயாரிக்குக.
2. வெற்றிகரமான வாழ்க்கை இலட்சியத்தை அடைவதற்கு மேற்கொள்ள வேண்டிய படிகள் ஐந்தையும் எழுதி உங்களது இலட்சியத்தை அடைவதற்கு அந்த ஒவ்வொரு கட்டத்திலும் செய்யும் நடவடிக்கைகளை குறிப்பிடுக.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## ஒப்படை

1 உமது தனித்துவத்தையும் சுயமதிப்பையும் பாதுகாப்பதற்கு உங்களிடம் காணப்படக் கூடிய பண்புகளைக் கொண்ட பட்டியலைத் தயாரிக்குக.

2 வெற்றிகரமான வாழ்க்கை இலட்சியத்துடன் வாழ்ந்து சிறந்து விளங்கிய சமூகத் தலைவர்கள் பற்றிய அறிக்கையினைத் தயாரிக்குக.

3 "பாதகமான சமூக சக்திகளிலிருந்து ஒதுங்கி வாழ்வோம்" எனும் தலைப்பில் பத்திரிகைக்கு ஆக்கம் ஒன்றை வரைக.

## சாரம்சம்

☞ உலகிலுள்ள ஒவ்வொரு தனிப்பட்டவரிடமும் விசேட தனித்துவம் காணப்படுகின்றது. அதனை அவரவரே அறிந்து கொண்டு தமது சுயமதிப்பை முன்னேற்றிக் கொள்ளலாம்.

☞ தனித்துவமாகவும், சுயமதிப்புடனும் செயற்படும் நாம் சமூக சக்திகளை அறிந்து அவற்றுள் சாதகமானவற்றை தம்முடன் சேர்த்தும், பாதகமானவற்றை நீக்கியும் வாழ்க்கை வெற்றியினை ஓர் உறுதியான இலட்சியத்தின் மூலம் அடைவதற்கு முயற்சிக்க வேண்டும்.

☞ நீங்கள் எதை விரும்புகிறீர்களோ அதை அடைவதற்கு இறுதி வரை முயற்சிப்பதே சிறந்தது என்பதை இப்பாடம் உங்களுக்கு உணர்த்தியிருக்கும்.